RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-18 | 18 ஜனவரி | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அரிட்டாபட்டி உள்ளிட்ட கிராமங்களில் 'டங்ஸ்டன் திட்ட எதிர்ப்பு' கோலமிட்ட மக்கள்




மதுரை ஜன.18

மதுரை மேலூர் பகுதியில் டங்ஸ்டன் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் வீட்டு வாசலில் 'டங்ஸ்டன் திட்டம் வேண்டாம்" என்பதை வலியுறுத்தி கோலமிட்டனர்.

அரிட்டாபட்டி பகுதியில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைக்க மத்திய அரசு வேதாந்தாவின் ஹிந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்துக்கு ஏலம் விட்டுள்ளது. இதை ரத்து செய்யக்கோரி அரிட்டாபட்டி பகுதி கிராமத்தினர், மேலூர் பகுதி மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழக அரசு வழங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு பொருட்களை அரிட்டாபட்டி, நரசிங்கம்பட்டி கிராம மக்கள் ரேஷன் கடைகளில் வாங்காமல் புறக்கணித்தனர்.

இதனிடையே, ஜன. 13ம் தேதி அரிட்டாபட்டி அருகே மீனாட்சிபுரம் கிராமத்தில் டங்ஸ்டன் சுரங்க திட்ட எதிர்ப்பு பொங்கல் விழாவை நடத்தவும், எதிர்ப்பு குலவையிடவும், கோலமிடவும் கிராம மக்கள் மற்றும் போராட்ட அமைப்பினர் திட்டமிட்டிருந்தனர். இதற்கு ஒத்தக்கடை போலீஸார் தடை விதித்தனர். இதனால் எதிர்ப்பு பொங்கல் விழா கொண்டாடப்படவில்லை.

அதே நேரம், ஜன. 14, 15, 16 ஆகிய 3 நாட்களாக வீட்டு வாசலில் டங்ஸ்டன் எதிர்ப்பு கோலங்களை இட்டு வருகின்றனர். அரிட்டாபட்டி, மீனாட்சிபுரம், நரசிங்கம்பட்டி, கம்பூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் தினமும் டங்ஸ்டன் எதிர்ப்புக் கோலமிட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் மாட்டுப் பொங்கல் தினத்தில் மாடுகளின் வயிற்றில் 'டங்ஸ்டன் திட்டத்தை ரத்து செய்' என்ற வாசகத்தை எழுதினர்.

## சென்னை பன்னாட்டு புத்தக திருவிழா தொடக்கம் 64 நாடுகளை சேர்ந்த பதிப்பகங்கள் பங்கேற்பு

சென்னை ஜன.18

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 3வது சென்னை பன்னாட்டு புத்தக திருவிழா நேற்று தொடங்கியது. அமைச்சர் அன்பில் மகேஸ் தொடங்கிவைத்தார். ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி உட்பட 64 நாடுகளைசேர்ந்த பதிப்பகங்கள் இதில் பங்கேற்றுள்ளன.

சிறந்த தமிழ் படைப்புகளை உலக அளவில் கொண்டு செல்லவும், உலக அளவில் சிறந்த படைப்புகளை தமிழுக்கு கொண்டுவரும் நோக்கிலும் தமிழக அரசு சார்பில் சென்னை பன்னாட்டு புத்தக திருவிழா ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. அந்த வகையில், 3வது சென்னை பன்னாட்டு புத்தக திருவிழா நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மைய வளாகத்தில் நேற்று தொடங்கியது. ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி உட்பட 64 நாடுகளை சேர்ந்த பதிப்பகங்கள் பங்கேற்றுள்ள இந்த பிரம்மாண்ட நிகழ்வை பள்ளிக் கல்விதுறை அமைச்சர் அன்பில் மகேஸ் தொடங்கி வைத்தார்.



அவர் பேசியதாவது:

முதலாவது சென்னை பன்னாட்டு புத்தக திருவிழாவில் 24 நாடுகள் பங்கேற்று 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 2 வது திருவிழாவில் 45 நாடுகள் கலந்துகொண்டு 750 ஒப்பந்தங்களும் அமைக்கப்பட்டன. தற்போது நடைபெறும் 3வது திருவிழாவில் 64 நாடுகள் பங்கேற்றுள்ளன. இதன்மூலம் சுமார் 1,000 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கிறோம்.

தமிழின் சிறந்த படைப்புகளை உலக மொழிகளில் கொண்டு செல்வதற்கு உதவும் வகையில் பதிப்பாளர்களுக்கு தமிழக அரசு மொழிபெயர்ப்பு மானிய உதவி வழங்குகிறது. இதன்மூலம் சிறந்த தமிழ் படைப்புகள் உலக தளத்துக்கு எடுத்துச் செல்லப் படுகின்றன. அந்த வகையில், 36 மொழிகளில் 162 நூல்களுக்கு மொழிபெயர்ப்பு மானிய நிதி வழங்கப்பட்டுள்ளது. இன்னும் பல நூல்களுக்கு இந்த நிதி வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

தென்னிந்திய புத்தக விற்பனையாளர், பதிப்பாளர் சங்க (பபாசி) தலைவர் எஸ்.சொக்கலிங்கம், தமிழ்நாடு பாடநூல், கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, இத்தாலியின் பொலோனியா புத்தக நிறுவன இயக்குநர் ஜாக்ஸ் தாமஸ், ஜெர்மனியின் திரவுபதி வெர்லாக் இயக்குநர் கிறிஸ்டியான் வைஸ் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

முன்னதாக, பள்ளிக்கல்வி துறை செயலர் எஸ்.மதுமதி வரவேற்றார். நிறைவாக தமிழ்நாடு பாடநூல் கழக மேலாண் இயக்குநர் மற்றும் பொது நூலக துறை இயக்குநர் பொ.சங்கர் நன்றி கூறினார். விழாவில், பாடநூல் கழக இணை இயக்குநர் தே.சங்கர சரவணன், பொது நூலக இயக்கக இணை இயக்குநர் எஸ்.இளங்கோ சந்திரகுமார் மற்றும் எழுத்தாளர்கள், புத்தக ஆர்வலர்கள், புத்தக வெளியீட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

3 நாட்கள் நடைபெறும் விழாவில், கலந்துரையாடல், கருத்தரங்கம், பயிலரங்கம், பயிற்சி பட்டறை, குழு விவாதம் என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சென்னை பன்னாட்டு புத்தக திருவிழா இன்று (ஜன.18) நிறைவடைகிறது.

## அதிபர் பதவியேற்பு விழா புறக்கணிப்பு வலுக்கும் ஒபாமா மிச்செல் விவாகரத்து ஊகங்கள்

நியூயார்க், ஜன.18

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் மிச்செல் ஒபாமா பங்கேற்க மாட்டார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால், முன்னாள் அதிபர் ஒபாமா, அவரது மனைவி மிச்செல் விவாகரத்து செய்யப் போகிறார்கள் என்ற ஊகங்கள் வலுத்துள்ளது.

முன்னதாக, முன்னாள் அதிபர் ஜிம்மி கார்டரிம் இறுதி அஞ்சலி கூட்டத்தில் பராக் ஒபாமா மட்டுமே பங்கேற்றார். அப்போதே சமூக ஊடகங்கள் பலவற்றிலும் ஒபாமாவுக்கும், மிச்செலுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அதனால் இருவரும் பிரியப் போகிறார்கள் என்று பேசப்பட்டது. இந்நிலையில் ட்ரம்ப் பதவியேற்பு விழாவிலும் மிச்செல் பங்கேற்க மாட்டார் என்ற அதிகாரபூர்வ தகவல் வெளியானதால் இந்த ஊகங்கள் வலுப்பெற்றுள்ளது.



மிச்செல் ஒபாமா தரப்பிலிருந்து வெளியான அதிகாரபூர்வ அறிவிப்பில், "அமெரிக்க அதிபர் பதவியேற்பு விழாவில் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா பங்கேற்கிறார். ஆனால் ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா பங்கேற்கவில்லை." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் பதவியேற்பு விழாக்களில் முன்னாள் அதிபர்கள் அவர்களின் இணையுடன் பங்கேற்பது கலாச்சார பாரம்பரியமாக அந்நாடில் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நிலையில், அந்த மரபிலிருந்து விலகி மிச்செல் ஒபாமா பங்கேற்க மாட்டார் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது. பராக் ஒபாமாவும், மிச்செல் ஒபாமாவும் 1992 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றனர்.

இந்நிலையில் கடந்த சில நாட்களாகவே பராக் ஒபாமா மிச்செல் ஒபாமா விவாகரத்து செய்யப்போவதாக அந்நாட்டு சமூக வலைதளங்களில் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன.

## முல்லை பெரியாறு அணையின் புதிய கண்காணிப்பு குழுவுக்கு தமிழக விவசாயிகள் எதிர்ப்பு

சென்னை, ஜன.18

முல்லைப் பெரியாறு அணை கண்காணிப்புக்காக புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதில் கேரள அதிகாரிகள் இடம் பெற்றதற்கு தமிழக விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து வரும் 25ம் தேதி தமிழக எல்லையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளனர்.



முல்லை பெரியாறு அணையில் 152 அடி நீர் தேக்கப்பட்டு வந்த நிலையில் 1979ம் ஆண்டு அணை பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாக கேரளாவில் வதந்தி பரவியது. இதனைத் தொடர்ந்து அணையின் உச்ச நீர்மட்டம் 136 அடியாக குறைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இருமாநிலங்களுக்கும் அணை தொடர்பான சர்ச்சை தொடங்கியது. 2011ம் ஆண்டு தமிழக எல்லையில் பெரும் போராட்டம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இரு மாநிலங்களும் உச்ச நீதிமன்றத்தை நாடின. 2014ம் ஆண்டு விசாரணை முடிவில் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தவும், பேபி அணையைப் பலப்படுத்திய பிறகு 152 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதுவரை முல்லைப் பெரியாறு அணையை கண்காணிக்கவும், பராமரிக்கவும் மத்திய கண்காணிப்பு மற்றும் துணை குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்தது.

இந்நிலையில் கடந்த நவம்பரில் முல்லைப் பெரியாறு அணை தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இதனைத் தொடர்ந்து நவம்பர் 21ல் கண்காணிப்பு மற்றும் துணை கண்காணிப்பு குழுவும் கலைக்கப்பட்டது. இந்நிலையில் மத்திய நீர்வள ஆணையம் 7 பேர் கொண்ட புதிய மேற்பார்வைக் குழுவை நியமித்துள்ளது.

இதன் தலைவராக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் அனில் ஜெயின், தமிழக பிரதிநிதிகளாக தமிழக நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மணிவாசன், காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இதேபோல் கேரள நீர்வளத் துறையைச் சேர்ந்த இருவரும் இதில் இடம்பெற்றுள்ளனர். இக்குழுவின் தொழில்நுட்ப உதவிக்காக பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தின் அணைகள் ஆய்வு அதிகாரியும், புதுடில்லியைச் சேர்ந்த தேசிய பேரிடர் மேலாண்மை குழு அதிகாரி என மொத்தம் 7 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவில் கேரள அதிகாரிகள் இடம்பெற்றதற்கு தமிழக விவசாயிகள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதுகுறித்து பெரியாறு வைகை பாசன விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் பென்னிகுவிக் பாலசிங்கம் கூறுகையில், பெரியாறு அணை குறித்து கேரளாவில் தொடர்ந்து வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. இந்த அணை தமிழகத்தின் குத்தகையின் கீழ் இருந்துவருகிறது. இந்நிலையில் புதிய குழுவில் கேரளாவைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இருப்பதால் சிறிய பராமரிப்புப் பணிக்கு கூட அவர்களை கெஞ்ச வேண்டிய நிலை ஏற்படும். நீர்மட்டத்தை மேலும் குறைக்க உத்தர விடும் நிலைகூட உருவாகலாம்.

எனவே கேரள அதிகாரிகளை இக்குழுவில் இருந்து நீக்க வேண்டும். இதனை வலியுறுத்தி வரும் 25ம் தேதி தமிழக எல்லையில் பெரிய அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும், என்றார்.

## ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட இறுதிநாளில் வேட்புமனுத்தாக்கல் செய்த நாம் தமிழர் கட்சி வேட்பாளர்



ஈரோடு, ஜன.18

ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட நேற்று (17ம் தேதி) இறுதி நாளாகும். இன்று காலை 11 மணியளவில், நாம் தமிழர் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மா.கி. சீதாலட்சுமி, தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷிடம் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

முன்னதாக, ஈரோடு சூரம்பட்டி நான்கு சாலை சந்திப்பு பகுதியில் வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் ஒன்று திரண்டனர்.

அங்கிருந்து வேட்புமனு தாக்கல் செய்யும் இடமான மாநகராட்சி அலுவலகத்துக்கு ஊர்வலமாக செல்ல அவர்கள் திட்டமிட்டு இருந்தனர். ஆனால், காவலதுறையினர் ஊர்வலத்துக்கு அனுமதி மறுத்தனர். இதையடுத்து வேட்பாளர் சீதாலட்சுமி மட்டும் சிறிது தூரம் நடந்து சென்று தனது எதிர்ப்பை பதிவு செய்து விட்டு, கார் மூலம் மாநகராட்சி அலுவலகத்துக்கு வந்து தனது வேட்புமனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மனுத் தாக்கல் செய்தார்.

இதனைத் தொடர்ந்து சீதாலட்சுமி கூறியதாவது: சூரம்பட்டி நான்கு சாலை சந்திப்பு பகுதியில் இருந்து ஊர்வலமாக வந்து மனுத் தாக்கல் செய்ய போலீஸார் அனுமதி மறுத்து விட்டனர். திமுகவினர் இப்போதே அராஜகத்தை தொடங்கி விட்டனர். சட்டத்துக்கு உட்பட்டு பிரச்சாரம் செய்த நாம் தமிழர் கட்சியினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. திமுகவின் அடக்குமுறையை மீறி, சீமான் தலைமையில், சட்டத்துக்கு உட்பட்டு பிரச்சாரம் மேற்கொள்வோம்.

வாக்காளர்களைச் சந்தித்து நீதி கேட்போம். அவர்கள் எங்களை ஆதரித்து திமுகவுக்கு சரியான பாடம் புகட்டுவார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதனிடையே ஈரோடு வ.உ.சி. பூங்கா பகுதியில் அனுமதியின்றி பிரச்சாரம் செய்ததாக, நாதக நிர்வாகி நவநீதன் உட்பட 5 பேர் மீது கருங்கல்பாளையம் போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## ஈரோடு இடைத்தேர்தலில் போட்டியும் இல்லை யாருக்கும் ஆதரவும் இல்லை! தவெக அறிவிப்பு

சென்னை ஜன.18

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலை அதிமுக, தேமுதிக, பாஜக என முக்கிய எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒரு சேர புறக்கணித்துவிட்ட நிலையில், தற்போது அந்த வரிசையில் இணைந்துள்ளது தவெக. "ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலை புறக்கணிப்பதோடு, எந்தக் கட்சிக்கும் ஆதரவு இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று தவெக பொதுச் செயலாளர் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக வெற்றிக் கழகத் தலைவர் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 2ம் தேதி வெளியிட்ட கட்சித் தொடக்க அறிவிப்பிற்கான முதல் அறிக்கையிலேயே, வரும் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்கள் பணியாற்றுவது



தான் தமிழக வெற்றிக் கழகத்தின் பிரதான இலக்கு என்றும், அதுவரை இடைப்பட்ட காலத்தில் நடைபெறும் உள்ளாட்சித் தேர்தல் உட்பட எந்தத் தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

மேலும் தமிழ்நாட்டில் ஆளும் அரசுகள் ஜனநாயக மரபுகளைப் பின்பற்றாமல் தங்களின் அதிகார பலத்துடன் பொதுத் தேர்தல்களைக் காட்டிலும், ஜனநாயகத்திற்கு எதிராகப் பல மடங்கு அரசியல் அவலங்களை அரங்கேற்றியே இடைத் தேர்தல்களில் வெற்றி பெற்று வருவது வழக்கம் என்பதையே கடந்த கால வரலாறு நமக்கு உணர்த்துகிறது. அதனடிப்படையில் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை தமிழக வெற்றிக் கழகம் புறக்கணிப்பதோடு, எந்த கட்சிக்கும் ஆதரவும் இல்லை என்பதையும் கட்சித் தலைவர் உத்தரவின் பேரில் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெவித்துள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏ ஈவிகேஎஸ் இளங்கோவன் மறைவை அடுத்து, பிப்ரவரி 5ம் தேதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் திமுக வேட்பாளராக வி.சி.சந்திரகுமார் அறிவிக்கப்பட்டுள்ளார். நாதக வேட்பாளராக சீதாலட்சுமி களம் காண்கிறார்.

2026 சட்டமன்ற பொது தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ள நிலையில் இந்த இடைத்தேர்தல் அறிவிப்பு கவனம் பெற்றது. ஆனால், இதே தொகுதியில் முன்னர் நடந்த இடைத்தேர்தலில் பண பலமும், அதிகார பலமும் வெற்றி பெற்றதாகக் கூறி ஒட்டு மொத்தமாக எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன. இந்நிலையில் தவெகவும் இத்தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது.

இதற்கு அக்கட்சியினர் மத்தியில் மாறுபட்ட விமர்சனங்கள் நிலவுகின்றன. சிலர் விஜய் ஏற்கெனவே அறிவித்ததுபோல் 2026 சட்டப்பேரவைத் தேர்தல் தான் தவெகவுக்கு இலக்கு என வரவேற்கின்றனர். இன்னும் சிலர் தவெக போன்ற புதிய கட்சிக்கு இந்த இடைத்தேர்தல், தேர்தல் அரசியல் களத்தில் முன்னோட்டமாக இருக்கும். இதைப் புறக்கணித்திருக்காமல் தேர்தலில் பங்கேற்ற தொண்டர்கள் களப் பணியாற்றவைத்து, பிரச்சாரக் களம்கண்டு அனுபவப் பாடம் பெற்றிருக்க வேண்டும் என்று ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## திருவஞ்சேரியில் ஒன்றிய செயலாளர் ஏற்பாட்டில் பொங்கல் திருநாளை யொட்டி மாபெரும் நலத்திட்ட உதவி



திருவஞ்சேரி ஜன18

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பரங்கிமலை மேற்கு ஒன்றிய திருவஞ்சேரியில் ஒன்றிய கழகச் செயலாளர் மதுரப்பாக்கம் எம்பி.மனோகரன் ஏற்பாட்டில் பொங்கல் திருநாளை யொட்டி மாவட்ட கழக செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் கலந்துகொண்டு ஏழை எளிய மக்களுக்கு கரும்பு சேலை மற்றும் கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு பொருட்களை வழங்கினார் நிகழ்ச்சியில் அனைத்துலக எம்ஜிஆர் மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம் சின்னையா, முன்னிலையில் நடைபெற்றது இதில் கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் கே.எஸ். மலர்மன்னன், மாவட்ட கழக பொருளாளர் பி.கே.பரசுராமன், தாம்பரம் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எம்.கூத்தன், மற்றும் திருவஞ்சேரி ஜே.பாலாஜி, அகரம் ஆதி கேசவன், அகரம் ஜானகிராமன், வெங்கம்பாக்கம் ரவி, திருவஞ்சேரி எஸ்.ரமேஷ், ஜே.பாஸ்கர், இ.சூரிய பிரகாஷ், ஜே.எம்.சந்தோஷ், ஆர்.தயாளன், ஆர்.தனசேகரன், வெங்கம்பாக்கம் அலாவுதீன் பாய் கோவிலஞ்சேரி பழனி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்.

## இளையான்குடியில் தைத்திருநாளை முன்னிட்டு திமுக கொடி ஏற்றும் விழா



இளையான்குடி ஜன18

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை சட்டமன்ற தொகுதி இளையான்குடி வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தை திருநாளை முன்னிட்டு கழக கொடியேற்றும் நிகழ்வு நடைபெற்றது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், நகர கூட்டுறவு வங்கி அருகில், நகர அலுவலகம் அருகில், கண்மாய் கரை, காவல் நிலையம் அருகில், புதூர் பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களில் கழக கொடியை இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் சுப.மதியரசன் பேரூர் செயலாளர் றி.கி நஜுமுதீன் தலைமையில் ஏற்றப்பட்டது. இந்நிகழ்வில் பேரூராட்சி துணை தலைவர் ஜி.ரி. இபுறாஹீம், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து மானா மதுரை தொகுதி தகவல் தொழில் நுட்ப பணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன் ஒன்றிய துணைச் செயலாளர் சிவனேசன், ராஜேந்திரன், மேலப்பள்ளிவாசல் டிரஸ்டி O.M.காதர் பாட்சா இளைஞரணி இபுராஹிம் ஷா பேரூர் நிர்வாகிகள் கம்பன் காதர் மெடிக்கல் காதர் மணிமொழியன் பாலமுருகன் ராஜாசிங், சஃப்ரிக், ஷாகிர் அலி ஷாயின் ஷா, அப்சல் கான், இக்ஷான், தாரிக், சபீர் அஹமது மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




செங்கல்பட்டு மாவட்டம் பழைய தாம்பரம் கிராம நலச்சங்கம் சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் விழா மற்றும் எஸ்.ஆர்.ராஜா தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.25 லட்சம் திட்ட மதிப்பீட்டில் நூலகம் திறப்பு விழா நடைபெற்றது. புதிய நூலாக கட்டிடத்தை தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ் திறந்து வைத்தார். உடன் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்எல்ஏ தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன் மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ரமணி அதிமூலம், முன்னாள் பேச்சாளர் எஸ்.ஜி.கருணாகரன், வேலுமணி, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர்கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் 13வது வார்டு சார்பில் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு பேண்ட் சர்ட் உள்ளிட்ட பொருட்களை வழங்கினார். செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 13வது வார்டு வட்டச் செயலாளர் பரமசிவம் அவர்கள் ஏற்பாட்டில் சுமார் 100 நபர்களுக்கு தமிழ் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு இளைஞரணி நிர்வாகிகளுக்கு அனைவருக்கும் பொங்கல் பரிசாக புத்தாடைகள் வழங்கினார்கள் இறுதியில் அனைவரும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொண்டனர்..

## போடியில் முன்னாள் தமிழக முதல்வர் எம்ஜிஆர் பிறந்த நாள் கொண்டாட்டம்



தேனி.ஜன 18

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில்முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் அவர்களின் 108வது பிறந்த நாளை முன்னிட்டு கழக ஒருங்கிணைப்பாளர் தமிழக முன்னாள் முதல்வர் போடிநாயக்கனூர் சட்டமன்ற உறுப்பினர் ஓ. பன்னீர்செல்வம் ஆணைக்கிணங்க போடி நகர செயலாளர்.வி .ஆர் .பி பழனிராஜ் தலைமையில் தொண்டர்கள் உரிமை மீட்பு குழுவினர் ஏராளமாக கலந்து கொண்டு நகர பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள எம்ஜி ஆர் சிலைக்கு மாலை அணிவித்து இனிப்புகளை வழங்கினார்கள். ணிஜ.விசி.போடி தொகுதி செயலாளர் ணிஜ. போடி நகர செயலாளர் வடக்கு ஜெயராம் பாண்டியன் மற்றும் மகளிர் அணி எம்.ஜி.ஆர் மன்றம் எம்.ஜி.ஆர் இளைஞர் அணி சிறுபான்மையினர் அணி என தொண்டர் உரிமை மீட்பு குழுவின் அனைத்து பிரமுகர்களும் கலந்து கொண்டனர் போடி நகர ஒன்றிய தொண்டர் உரிமை மீட்புக் குழு உறுப்பினர்களும் ஏராளமான அளவில் கலந்து கொண்டனர்.

## பழனி அருகே பெரியகலையம்புத்தூரில் நடந்த ஜல்லிக்கட்டில் 700க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்பு



பழனி ஜன18

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே நெய்க்காரப்பட்டி பேரூராட்சிக்குட்பட்டது பெரியகலையம்புத்தூர். இங்குள்ள ஐகோர்ட் பத்ரகாளியம்மன் கோயில் கமிட்டி சார்பில் ஆண்டுதோறும் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜல்லிக்கட்டு நடத்தப்படுவது வழக்கம்.

இதன்படி நேற்று காலை 8மணியளவில் ஜல்லிக்கட்டு தொடங்கியது. வாடிவாசலில் இருந்து முதல்காளையாக காளியம்மன் கோயிலுக்கு சொந்தமான காளை மற்றும் பல்வேறு கோவில் காளை கள் வெளியேறியது. இதனைத் தொடர்ந்து திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு கோவை, கரூர், துரை, திருச்சி, தேனி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட 700க்கும்மேற்பட்ட காளைகள் வரிசையாக வாடிவாசலில் இருந்து வெளியேற்றப்பட்டன. 500க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் காளைகளை அடக்க முற்பட்டனர். 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு சுழற்சிமுறையில் வீரர்கள் மாடுபிடிக்க அனுமதிக்கப்பட்டனர். துள்ளி வந்த காளைகளை வீரர்கள் பாய்ந்து அடக்கமுயன்ற காட்சி காண் போரை வியக்கச் செய்தது. மாடுகள் முட்டியதில் சில மாடுபிடி வீரர்களுக்கு லேசான காயம்ஏற்பட்டது. பார்வையாளர்கள் மைதானத்திற்குள் புகுந்து விடாதபடி 2 அடுக்கு தடுப்புகள் அமைக்கப்பட்டு ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

மாடுகளை அடக்கியவீரர்களுக்கு தங்க நாணயம், வெள்ளி நாணயம், பீரோ, கட்டில், சேர், குத்துவிளக்கு, செல்போன், சுவர்கடிகாரம், உள்ளிட்டபொருட்கள் பரிசுகளாக வழங்கப்பட்டன. அதே போல அடங்காத காளைகளின் உரிமையாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை ஏராளமானோர் கண்டு ரசித்தனர். இந்த போட்டியில் அய்யம் பாளையத்தை சேர்ந்த மாடுபிடி வீரர் அருண்குமார் என்பவரை மாடு முட்டியதில் படுகாயம் ஏற்பட்டது. அதே போல பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த விருவீடு சார்பு ஆய்வாளர் கணேசன், நிலக்கோட்டை மகளீர் காவல் நிலைய தலைமை காவலர் பாக்கியலட்சுமி ஆகியோரும் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களை மீட்டு பழனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த போட்டியின்போது விபத்து ஏற்பட்டால் முதலுதவி சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் வாகனங்களும், கால்நடை மருத்துவர்களும், டாக்டர்களும் முகாமிட்டுள்ளனர். டி.எஸ்.பி தனஞ்ஜெயன் தலைமையில் முன்னூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். சார்ஆட்சியர் தலைமையில் வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் விலங்குகள் நலவாரிய அதிகாரிகள் கண்காணிப்புபணியில் ஈடுபட்டுள்ளனர்.

## தேனியில் கர்னல்.ஜான் பென்னிகுவிக் திருவுருவ சிலைக்கு தமிழ்நாடு ஊடக மக்கள் சங்கத்தினர் மாலை அணிவிப்பு



கூடலூர் ஜன18

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மக்களின் வாழ்வாதாரத்திற்காக தன்னுடைய சொந்த செலவில் முல்லை பெரியாறு அணையை கட்டிய கர்னல். ஜான் பென்னிகுவிக் பிறந்தநாளை தேனி மாவட்ட முல்லை பெரியாறு அணை பகுதிகளான கூடலூர், கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், வீரபாண்டி பகுதிகளில் உள்ள கிராமங்களில் வருடந்தோறும் ஜனவரி 15 ஆம் தேதி பிறந்த நாள் விழாவை பொங்கல் வைத்து சிறப்பாக கொண்டாடுவது வழக்கம்.

இந்நிலையில் அவரது 184 வது பிறந்தநாள் விழாவை கொண்டாடும் விதமாக தேனி மாவட்டம் கூடலூர் அருகே லோயர் கேம்ப் பகுதியில் உள்ள கர்னல்.ஜான் பென்னிகுவிக் திருவுருவ சிலைக்கு தமிழ்நாடு ஊடக மக்கள் சங்க மாநில தலைவர் புருஷோத்தமன் அறிவுறுத்தலின்படி தேனி மாவட்ட தலைவர் ராஜன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு ஊடக மக்கள் சங்க மாநில இணைச் செயலாளர் சசிகுமார், துணைச் செயலாளர் பிரதீப், மாவட்ட செயலாளர் பால்ராஜ், துணைத் தலைவர் பால குருசாமி, ஒருங்கிணைப்பாளர்கள் சிவராஜ், விஜயகுமார், சங்க உறுப்பினர்கள் வெங்கடசாமி, முத்து கிருஷ்ணன், கார்த்திக், கார்த்திக் ராஜா, செந்தில் முத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வடுகபட்டி பேரூர் அஇஅதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் பிறந்தநாள்



பெரியகுளம் ஜன 18

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே வடுகபட்டி பேருந்து நிறுத்தத்தில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் 108 வது பிறந்த நாள் கொண்டாட்டம் வடுகபட்டி அஇஅதிமுக பேரூர் கழக செயலாளர் பாலமுருகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் பெரியவீரன், பெரியகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜகுரு, மாநில தலைமைக் கழக பேச்சாளர் சுந்தர பாண்டியன், மாநில பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்ப சாமி, மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் கழகத்தின் போர்வாள் அப்பாஸ் மைதீன், தாமரைக் குளம் கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் தண்டபாணி, ஒன்றிய அவை தலைவர் முத்துசாமி, விவசாய அணி பிரிவு செயலாளர் ரத்தினவேல், வடுகபட்டி பேரூர் கழக அவைத் தலைவர் பெத்தண சாமி, துணைச் செயலாளர் பாலையா, பொருளாளர் வெற்றிவேல், மாவட்ட பிரதிநிதி ராஜேந்திரன், வார்டு கழக செயலாளர்கள் சௌந்தர பாண்டியன், முத்திருளன், திரிசங்கு, பழனிவேல் உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பேரூர் கழகத்தில் உள்ள வார்டுகளில் அஇஅதிமுக கொடியேற்றி இனிப்புகள் வழங்கினர். இந் நிகழ்ச்சிக்கு முன்னதாக வடுகபட்டி பேருந்து நிறுத்தத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட குடிலில் தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்தனர்.

# முதுகுளத்தூரில் அஇஅதிமுக சார்பில் எம்ஜிஆர் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



முதுகுளத்தூர் ஜன18

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பேருந்து நிலையம் அருகில் ஜன,18, தமிழக முன்னாள் முதல்வர் எம்,ஜி,ஆர் அவர்களின் 108 வது பிறந்தநாளை முன்னிட்டு அலங்கரித்து வைக்கப்பட்ட அவரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்தும் பொது மக்களுக்கு இனிப்புக்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுந்தரபாண்டியன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மலேசியா பாண்டியன் தலைமை வகித்தனர். மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணன் மத்திய ஒன்றிய செயலாளர் செந்தில் குமார் முன்னிலை வகித்தனர்.

இதில் நகர் கழக பொருப்பாளர் குருசாமி நகர் கழக செயலாளர் முத்துராமலிங்கம் மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் கண்ணன் முத்துராமன், இலங்கோவன், மற்றும் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் தர்மராஜ் பாண்டியன், இளங்கோவன், சுரேஷ், வையமுத்து, அம்சராஜ், குமார், நிறைகுளத்தான், தமிழ்மணி, மாரி, பாக்கியம், பேச்சி, இராஜேந்திரன், ராமமூர்த்தி, சுப்பிரமணியன், இருளாண்டி, ராமலிங்கம், செல்லத்தேவர், இருளப்பன், சிவக்குமார், மற்றும் மாநிலம், மாவட்டம், ஒன்றியம், பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பெருங்களத்தூர் வடக்கு பகுதி 49வது வட்ட கழகம் சார்பில் பொங்கல் விழா நிகழ்ச்சி

தாம்பரம், ஜன18

பெருங்களத்தூர் வடக்கு பகுதி 49வது வட்ட கழக சார்பில் பொங்கல் விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி 49வது வட்ட திமுக சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் விழா கஸ்தூரி பாய்நகர், காட்டு கருமாரியம்மன் கோயில் அருகில் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் தலைமையிலும் வட்ட பிரதி நிதி ஆர். சீனா வரவேற்பிலும் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, மாநக ராட்சி மேயர் க.வசந்தகுமாரி ஆகியோர் கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் மற்றும் பல்வேறு விளையாட்டு போட்டி களை துவக்கி வைத்து சிறப் புரையாற்றினார்கள். உடன் முன்னாள் பேச்சாளர் எஸ்.ஜி. கருணாகரன், மாநகர இளைஞ ரணி துணை அமைப்பாளர் ராஜேஷ் சர்தார், கார்த்திக் உட்பட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வா கிகள், பொதுமக்கள் அனைவ ரும் கலந்து கொண்டனர்..

# தை திருநாள் பொங்கல் நாளில் மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம் வழங்கிய பா.ம.கவினர்

தாம்பரம் ஜன18

பல்லாவரம் அடுத்த கவுல் பஜார் ஊராட்சி அலுவலகம் அருகே தைப்பொங்கல் முன் னிட்டு பாட்டாளி மக்கள் கட்சி கொடி ஏற்று இனிப்பு மற்றும் மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம் பேனா, மற்றும் கல்வி உபகரண பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி தாமஸ்மலை ஒன்றியம் பா.ம.க தலைவர் கவுல்பஜார் பாபு தலைமையில் நடைபெற்றது சிறப்பு அழைப்பாளர்களாக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் கீழ்கட்டளை இரா. வெங்கடேசன், பசுமைத்தாயகம் மாநில துணைச் செயலாளர் ஐ.நா.கண்ணன்,





வன்னியர் சங்கம் மாவட்ட செயலாளர் முரசு இராஜேந் திரன், மாவட்ட துணைச் செய லாளர் பூக்கடை முனுசாமி, மாவட்ட துணைத் தலைவர் கணபதி, ஒன்றிய செயலாளர் மணிகண்டன், விநாயகம், ஏர்போட் செல்வக்குமார், துரை எம்.சி, முகுந்தன், ரமேஷ், நாராயணன், கண்ணன், வெங்கடேசன், தியாகு மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# செங்கல்பட்டு 17வது வார்டு திமுக சார்பில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

பல்லாவரம் ஜன 18

செங்கல்பட்டு 17வது வார்டு திமுக சார்பில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பல்லா வரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 17வது வார்டு திமுக வழக்கறிஞர் பி.ஜி.பிரபு அவர்கள் ஏற்பாட்டில் இரு வன்னக்கொடியேற்றி வைத்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சுமார் 700 நபர்களுக்கு பேண்ட், ஷர்ட், புடவை, உள்ளிட்ட உதவிகளை வழங்கினார் அதனை தொடர்ந்து

அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுடன் இணைந்து மேளதாளம் முழுக்க ஊர்வ லமாக நடந்து சென்று உற்சா கமாக பொங்கல் கொடுத்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்





இதில் தாம்பரம் மாநகர அணிகளின் துணை அமைப் பாளர்கள், 17வது வார்டு நிர்வா கிகள் மற்றும் மகளிர் அணி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இளையான்குடியில் பொங்கல் விழாவில் தமிழரசி எம்எல்ஏ

சிவகங்கை ஜன18

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றியம்தாயமங்கலம்விலக்கு, செந்தமிழ் நகரில் நேற்று நடைபெற்ற பொங்கல் விழாவில் முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் கலந்து கொண்டு திமுக இருவர்ணக் கொடியினை ஏற்றி வைத்து தூய்மை பணியாளர்களுக்கு வேஷ்டி, சேலைகள் வழங்கினார். இந்நிகழ்வில் இளையான்குடி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப. மதியரசன் கண்ணமங்கலம் கூட்டுறவு சங்க தலைவர் சுப. தமிழரசன் மாவட்ட விவசாய அணி காளிமுத்து ஒன்றிய மகளிர் அணி. பஞ்சவர்ணம் எஸ்.காரைக்குடி ஊராட்சி மன்ற தலைவர் குழந்தை பாண்டியன் நகர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இப்ராஹிம்ஷா செயலாளர் சத்யேந்திரன் அவர்கள் கோச்சடை முத்துராமலிங்கம் தெளலத் மற்றும் திமுக நிர்வாகிகள் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர். அதே போல் இளையான்குடி ஒன்றியம் வண்ணாரவயலில் புதிய சிந்தனைத்துளிகள் சார்பில் தமிழர் திருநாள் விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் தலைமையேற்று பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் முன்னிலை வகித்தார். ஊரக வளர்ச்சித்துறை மாவட்டச்செயலர் இரா. இராதாக்கிருஷ்ணன் சிறப்புரையாற்றினார், ஒருங்கிணைப்பாளர்கள் சரவணக்குமார் முத்துக்குமார், இராசேஸ்வரி மற்றும் பலர் கலந்துகொண்டனர்! கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன!





# திருநெல்வேலியில் வர்த்தக வாகனங்களுக்காக புதுமையான பொங்கல் அழகு போட்டி!

திருநெல்வேலி, ஜன 18,

இந்தியாவில் அதிகம் மதிக்கப்படும் வங்கிசாரா நிதி நிறுவனங்களுள் (NBFC) முதன்மை வகிக்கும் சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க முதன்மை பண்டிகையான பொங்கல் திருநாளையொட்டி வர்த்தக வாகனங்களுக்கான 2025 பொங்கல் அழகு போட்டியை திருநெல்வேலி நகரில் சிறப்பாக நடத்தியது.



சுந்தரம் சங்கமம் என்ற பெயரில் நடைபெற்ற இந்நிகழ் வில் 38 டிரக் உரிமையாளர்கள் உற்சாகத்தோடும், ஆர்வத் தோடும் பங்கேற்றனர். சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட 22 டிரக்குகள் இப்போட்டியில் கலந்துகொண்டன. மூன்று நடுவர்கள் இந்த டிராக்டர்களை மதிப்பாய்வுசெய்து அவைகளுள் முதன்மையான மூன்று டிராக்டர்களை தேர்வு செய்தனர். சிறப்பாக பராமரிக்கப்பட்ட, தூய்மையான மற்றும் அழகாக அலங்கரிக்கப்பட்ட இந்த டிராக்டர்களின் உரிமை யாளர்களுக்கு சுந்தரம் பைனான்ஸ் வழங்கிய பரிசுகள் விநியோகிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வர்களுள் பெரும்பான்மை யானோர் விவசாய சமூகத் தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது சுந்தரம் பைனான்ஸ்ன் டிராக்டர்க்கான நிதியுதவி நடைமுறை குறித்தும் மற்றும் முக்கியமான காமதேனு செயல்திட்டம் குறித்து நிறுவன அதிகாரிகள் விளக்கிக் கூறினர். தாழையூத்து காவல் நிலை யத்தின் ஆய்வாளர் சொரிமுத்து இந்நிகழ்வின் சிறப்பு விருந் தினராக பங்கேற்றார்.

மகிழ்ச்சியும், உற்சாகமும் நிறைந்த சூழலில் வாடிக்கை யாளர்களிடம் கலந்துரையாடி நல்லுறவை வளர்ப்பதற்காக பொங்கலையொட்டி இந்நிகழ்வு நடத்தப்பட்டது. அத்துடன், கேபின் அமைவிடம் உட்பட தங்களது வாகனங்களை பாதுகாப்புடனும், தூய்மை யாகவும் உயர்தரநிலைகளில் பராமரிக்கிற டிராக்டர் உரிமை யாளர்களை அங்கீகரித்து கவுரவிப்பதும் இந்நிகழ்வின் நோக்கமாகும். தங்களது டிராக்டர்களை அழகாக அலங் கரித்து தனித்துவ அடையாளத் தோடு போட்டியில் விவசாயிகள் கலந்துகொண்டது இந்நிகழ்வின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாகும்.

ஜனவரி 1ம் தேதி முதல் 31ம் தேதி வரை கடைபிடிக்கப்படும் "தேசிய சாலை பாதுகாப்பு மாதம்" 2025 நிகழ்வையொட்டி தமிழ்நாடு மாநிலத்தின் பல் வேறு அமைவிடங்களிலும் "சுந்தரம் சங்கமம்" நிகழ்வு நடத்தப்படுகிறது.

# வேலூர் மாவட்ட காவல்துறையின் சார்பில் பொங்கல் விழா

வேலூர் ஜன.18

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, நேதாஜி மைதா னம், வேலூர் மாவட்ட காவல் துறையின் சார்பில் அரசு துறை களில் யாரும் நடத்திடாத வகை யில் அனைவரையும் குடும் பத்துடன் வரவேற்று வரவைத்து பிரம்மாண்டமான முறையில் பல்வேறு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன் தலைமையில் பொங்கல் விழாவானது நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பங் கேற்று சிறப்பித்தனர். இதில் காவல்துறையினரும் குடும்பத் தினருடன் பங்கேற்று உற்சா கமாக பொங்கல் வைத்து பொங்கலோ பொங்கல் என கோஷங்களை எழுப்பி, பாரம்பரிய சிறப்பு பூஜைகள் செய்து மகிழ்ச்சியுடன் பொங்க லிட்டனர். மேலும், மியூசிக்கல் சேர், குதிரை சவாரி, சிலம் பாட்டம், பரதநாட்டியம் உள் ளிட்ட பல கலை நிகழ்ச்சி களுடன், குழந்தைகள் விளையாட ஸ்லைடர், பலூன் சுடுதல் போன்றவற்றையும், குடும்பத்துடன் வருகை புரிந்த அனைவருக்கும் வரவேற்பை சிறப்பிக்கும் வகையில், டீ, காபி, சமோசா, பொங்கல் என்றாலே சிறப்பு வாய்ந்த கரும்பு, ஐஸ் கிரீம், பானி பூரி, மசால் பூரி, பாப்கான், பஞ்சு மிட்டாய் என தனித்தனி அமைப்பில் பல்வேறு ஸ்டால்கள் அமைத்து இதுவரை அரசு துறைகளில் யாரும் நடத்திடாத வகையில் பிரம்மாண்டான முறையில் அனைவரின் உள்ளத்திலும் மகிழ்ச்சி பொங்கி, உண்மை யான மகிழ்ச்சியை பிரதி பலிக்கும் வகையில் பொங்கல் விழா கோலாகலமாக கொண்டாடப் பட்டது. இதில் சிறப்பு அழைப்பா ளர்களாக அனைத்து பத்தி ரிகை ஊடகங்கள் தொலைக் காட்சி ஊடகங்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பங் கேற்று விழாவை சிறப்பித்தனர்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் அரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால், தமிழக முதலமைச்சரால் மாநிலத்தில் அனைத்து விளையாட்டுகளிலும் தேசிய மற்றும் பன்னாட்டு அரங்கில் சாதனை படைத்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்க தொகைகளை வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த செல்வி. ஓவியா என்ற வீராங்கனைக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.9.50 லட்சம் வழங்கி கௌரவிக்கப்பட்டதை தொடர்ந்து, வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமியிடம் காசோலையை காண்பித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின் போது வேலூர் டி.ஆர்.ஓ மாலதி, உதவி ஆணையர் (கலால்) முருகன், மாவட்ட வழங்கல் அலுவலர் சுமதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, கொணவட்டம் மாங்காய் மண்டி மைதானம், வேலூர் மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அரசு பொருட்காட்சி அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள மத்திய/மாநில அரசின் சாதனைகள் விளக்க புகைப்பட கண்காட்சிகளை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டார். நிகழ்வின்போது இந்நிகழ்வின் போது வேலூர் ஆர்.டி.ஓ. பாலசுப்பிரமணியன் மற்றும் அலுவலர்கள் பணியாளர்கள் உடனிருந்தனர்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஊராட்சி ஒன்றியம் கீழநெட்டூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் மல்லிகா தலைமையில் ஆசிரியர்கள் செய்திருந்தனர். பொங்கல் வைத்து வழிபாடு செய்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டது.





தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள எ. புதுப்பட்டியில் ஒருங்கிணைந்த முன்னாள் தேனி மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினருமான எல். மூக்கையா அவர்களின் 80வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது இல்லத்தில் கேக் வெட்டி கழக நிர்வாகிகள் கொண்டாடினர். இந்நிகழ்வில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்கள் பலர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

## நெய்க்காரப்பட்டியில் பொங்கல் திருவிழாவில் கவுன்சிலருக்கு பொதுமக்கள் சேவை விருது

பழனி ஜன18




திண்டுக்கல் மாவட்டம் .பழனி வட்டம். பேரூராட்சி பதிமூனாவது வார்டில் ஊர் பொதுமக்கள் சார்பாக சமத்துவ பொங்கல் பொங்கலோ பொங்கல்'' என்று சொல்லும்போதே மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குகிறது. தமிழர் தம் ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்த விழாவாக தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் அமைந்துள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை ஊர் பொதுமக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பதிமூனாவது வார்டு கவுன்சிலர் மைதீன் பாட்ஷா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார் அவர் வார்டில் உள்ள பொது மக்களுக்கு அடிப்படை தேவைகளையும் ஒரு சில பேரிடர் காலத்தில் பொதுமக்களுக்கு உதவி செய்வதும் மருத்துவ உதவிகளும் உணவுகள் வழங்கி வருகிறார். அவரின் சேவையை பாராட்டி மக்கள் சேவகன் விருது புரட்சி யாளர் அண்ணல் அம்பேத்கர் உருவச்சிலை பொது மக்கள் வழங்கி கௌரவித்தனர். மற்றும் பொங்கல் விழாவில் கலந்துகொண்ட மாணவ மாணவிகளுக்கு கலை நிகழ்ச்சி நடத்தப் பட்டது வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கினார்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் பொங்கல் விழாவை முன்னிட்டு அண்ணா நகர் பகுதியில் அமைந்துள்ள சின்ன மாரியம்மன் கோவிலில் நடத்தப்பட்ட கபடி போட்டியில் அஞ்சு வீடு மானு பிரதர்ஸ் கபடி வீரர்கள் முதல் பரிசு பெற்றனர்.

## புனித தோமையார் மலை தெற்கு ஒன்றியத்தில் பொங்கலை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள்

செங்கல்பட்டு, ஜன.18





செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை தெற்கு ஒன்றியம், கோவிலம்பாக்கம் ஊராட்சியில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு கோவிலம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டாக்டர். ரங்கநாதன் சுண்ணாம்பு கொளத்தூர் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் பொது மக்களுக்கு தன்னுடைய சொந்த செலவில் புத்தாடைகள், பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கி சிறப்பித்து வழக்கம்.

இந்த ஆண்டும் தவறாமல் மாவட்ட பிரதிநிதி, 5வது வார்டு கவுன்சிலரமான ஏ.ஆர். சொக்கலிங்கம் இணைந்து வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து டாக்டர். ரங்கநாதன் தன்னுடைய இல்லத்தில் கழக நிர்வா கிகளுக்கு ஒவ்வொருவருக்கும் புத்தாடை மற்றும் ஏ. ஆர். சொக்கலிங்கம் அவர்கள் 200 ரூபாய் பரிசாக வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். இந்நிகழ்வில் ஊராட்சி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளி தமிழ்நாடு வனத்துறை சிவகங்கை வனச்சரகம் சார்பாக வன உயிரின வார விழா அரசு மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்றது.மாவட்ட அளவில் நடைபெற்ற இவ்விழாவில் நமது பள்ளியின் ஐந்தாம் வகுப்பு மாணவன் பிரத்யூன் பேச்சுப் போட்டியில் முதல் பரிசும்,பத்தாம் வகுப்பு மாணவி சோபிகா ஓவியப்போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றனர்.போட்டியில் வென்ற மாணவர்களுக்கு வனச்சரக அலுவலகத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மாவட்ட வனச்சரக அலுவலர் பார்த்திபன் பரிசுகள் வழங்கி பாராட்டினர்.வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளியின் சார்பாக பரிசுகள் பள்ளியின் தாளாளர் கபிலன் பள்ளியின் நிர்வாகி மீனாட்சி மற்றும் பள்ளியின் முதல்வர் சாரதா வழங்கினார்கள்.ஆசிரியர்கள் அனைவரும் மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

## திருப்பூர் மாநகரில் சமத்துவ பொங்கல் விழா கோலாகலம்

திருப்பூர் ஜன.18



திருப்பூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்து ராஜ் தலைமையில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் கடந்த (ஜன 14) திருப்பூர் மாநகராட்சி மற்றும் நொய்யல் பண்பாட்டு அமைப்பு ஜீவநதி நொய்யல் சங்கம் இணைந்து நடத்தும் திருப்பூர் பொங்கல் திருவிழா 2025 சமத்துவ பொங்கல் விழாவினை துவக்கி வைத்தார்கள்.

இதனை தொடர்ந்து, தை 2ஆம் நாள் புதன்கிழமை (ஜன 15) மாலை சமத்துவப் பொங்கல், மக்களிசைப் பாடல்கள், திண்டுக்கல் சக்தி கலைக்குழு பறையிசை, பரத நாட்டியம் (கவிநயா நாட்டியக் குழு), பத்மஸ்ரீ விருது பெற்ற பத்தரப்பனுக்கு பாராட்டு மற்றும் விருந்தினர்களை சிறப்பித்தல், கின்னஸ் சாதனையாளர் "டிரம்ஸ்'' சலோமி மற்றும் V2B குழுவினரின் போட்டியிசை, விஜய் டிவி புகழ் மூக்குத்தி முருகன், கலைவாணி பங்கு பெறும் விஷால் பாபுவின் இன்னிசைக் கச்சேரி நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

மேலும், தை 3ஆம் நாள் கடந்த வியாழக்கிழமை (16.1.2025) திருப்பூர் மாவட்ட சிலம்பாட்டக் கழகத்தின் சிலம்பாட்டம், நிமிர்வு குழுவினரின் பறையிசை, திருவாரூர் அருள் காவடியாட்டம், கங்கை கருங்குயில்கள் நாட்டுப்புற கலை நிகழ்ச்சி, ஈரோடு நாடகக் கொட்டகை குழுவினரின் நாடகம், புதுகை பூபாளம் நையாண்டி நிகழ்ச்சி, கேரளா பிரம்மா கலைக்குழு நடனம் மற்றும் மிஸ்டர் பிளாக் பல்சுவை நிகழ்ச்சி நிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாரம்பரியமிக்க தமிழர்களின் பண்பாட்டில் சிறந்த சகோதர, சகோதரிகள் ஒற்றுமையுணர்வு மேம்படவும், நாடு செழித்து மக்கள்வளம் பெற, பண்டைய காலத்தின் மரபுப்படி பொங்கல் சீர் கொடுத்து வாழ்வு செழிக்கவும், மதஒற்றுமை ஓங்கிடவும், தை 1ஆம் நன்நாளில் 501 பொங்கல் படைத்து இறை வழிபாடு நடத்த குடும்பங்கள் கலந்துகொண்டார்கள். அவர்களின் இறையுணர்வுக்கு மதிப்பளித்தும், சகோதரத்துவம் மேலோங்கிடவும், சீர்மிகு பொங்கல் பொருட்கள் வழங்கி மகிழ்ச்சி பொங்கும் தை 1ஆம் நாள் பொங்கல் விழா நடைபெற்றது.

மேலும், விழா நடைபெறும் நாட்களில் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாதவாறு கூட்டநெரிசலை தவிர்க் கும் வகையிலும், விழா மேடைகள் அமைக்க அறிவுறுத்தப் பட்டது. தீயணைப்புவாகனம், சுகாதாரத்துறையின் சிறப்பு முகாம் ஆகியவை அமைக்க துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனவே, விழாநடைபெறும் நாட்களும் திருப்பூர் மாநகரை விழாக்கோலம் பூண்ட மாநகராக மாற்றிடும் வகையில் பொதுமக்கள் அனைவரும் திருப்பூர் பொங்கல் திருவிழா 2025 சிறப்பான பொங்கல் விழாவாக நடத்த முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மேயர் ந. தினேஷ் குமார் கேட்டுக்கொண்டார்.

உடன் துணை மேயர் ரா.பால சுப்ரமணியம், மண்டல தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், தலைமை பொறியாளர் (பொ) செல்வ நாயகம், உதவி ஆணையாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், அகில் சு.ரத்தினசாமி, மு.ஜீவானந்தம், ஆர்.ஈஸ்வரன், மு.திருப்பதி, மோகன்.கே. கார்த்திக், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி மற்றும் நொய்யல் பண்பாட்டு அமைப்பு ஜீவநதி நொய்யால் சங்கம் இணைந்து நடத்திய 2025 சமத்துவ பொங்கல் விழாவில் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ், மேயர் தினேஷ்குமார், ஆணையாளர் ராமமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.உடன் துணை மேயர் பாலசுப்ரமணியம், மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் தலைமை பொறியாளர் செல்வநாயகம், உதவி ஆணையாளர்கள் மாநகராட்சி அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்..



திருப்பூர் மாநகராட்சி மண்டலம்2 புதிய பேருந்து நிலையத்தில் பொங்கல் பண்டிகை முன்னிட்டு பொதுமக்கள் நலன் கருதி பேரிகார்ட் அமைக்கப்பட்டதை மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் காவல்துறையினர் ,மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்..

## பென்னிகுவிக் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மக்கள் நல முன்னேற்ற சங்கத்தின் சார்பில் மாலை அணிவிப்பு

கூடலூர் ஜன18



தேனி மாவட்டம் கூடலூர் அருகே லோயர்கேம்ப் பகுதியில் உள்ள ஐந்து மாவட்டங்களின் வாழ்வாதாரத்திற்கு முல்லைப் பெரியாறு அணை கட்டித் தந்த வள்ளல் கர்னல் ஜான் பென்னிகுவிக் பிறந்த தினத்தை முன்னிட்டு மக்கள் நல முன்னேற்ற சங்கத்தின் மாநில செயலாளர் சந்திர பாண்டியன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நிறுவனத் தலைவர் பாளை இரா கணேசன் ஜான் பென்னிகுவிக் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில மகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் அபிநயா,மாநில ஊடகப் பிரிவு செயலாளர் பிரபாகரன், மாவட்ட துணை செய லாளர் சரவணன், பெரியகுளம் ஒன்றிய செயலாளர் வடிவேல் கம்பம் நகர செயலாளர் சின்னச்சாமி, நகர பொருளாளர் மனோகரன்,நகர துணை,செயலாளர் ஈஸ்வரன் ஊடகப் பிரிவு மாவட்ட செயலாளர் ஆனந்தன் பொதுக்குழு உறுப்பினர் கண்ணன்,ஒன்றிய இளைஞரணி துணை செயலாளர் சக்தி சிதம்பரம் ஊடகப் பிரிவு ஒன்றிய செயலாளர் தெய்வேந்திரன், வடுகபட்டி பேரூர் துணை செயலாளர் கண்ணன் பேரூர் செயற்குழு உறுப்பினர் சுப்புராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மதுராந்தகத்தில் விஜய் சேதுபதி பிறந்த நாளை முன்னிட்டு மதிய உணவு வழங்கல்

மதுராந்தகம் ஜன.18



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகர சார்பில் மக்கள் செல்வன் விஜய்சேதுபதி அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டத் தலைவர் புல்லட் விக்னேஷ் அவர்களின் ஆலோசனைப்படி ரசிகர்கள் சார்பில் நகர தலைவர் சேது சந்தோஷ், நகர செயலாளர் நந்தகுமார் தலைமையில் சுமார் 200 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு உணவுகளை வாங்கிக் கொண்டு சந்தோசமாக சென்று பொதுமக்கள் நன்றி தெரிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர் உடன் செல்வகுமார், செல்லா, மோகன், சேகர், முத்துப்பாண்டி, தமிழ், பார்த்திபன் உட்பட நகர பகுதி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்..

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161